## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.348/2023

**16.09.2025**

## P.W.1- குமார்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விவரங்களும் தெரியும். வா.சா.ஆ.1 புரோநோட்டில் 2021ம் வருடம் ஆவணி 30 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 30 ஆவணி 2021 என்பது ஆங்கில தேதியில் 15.09.2021யை குறிக்கும் என்றால் தெரியாது. பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் மேற்படி புரோநோட் தேதி 19.09.2021 என குறிப்பிடப்பட்டது தவறு என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. 19.09.2021ல் தான் பணம் கொடுத்தேன். 19.09.2021ம் தேதி என்பது 2021 புரட்டாசி 3ம் தேதி என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள தேதி தவறான தேதி என்றால் தமிழில் தவறாக தேதி உள்ளது. ஆங்கிலத்தில் தேதி சரியாக உள்ளது. முதல் விசாரணையில் சொல்லிய விவரமும், தற்போது கூறும் விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலம் மற்றும் பிராதில் புரோநோட்டில் உள்ள சாட்சிகள் பற்றி சொல்லப்படவில்லை என்றால் தெரியாது. நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் என சொல்லிவிட்டு தற்போது தெரியாது என மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ஜனவரி 2021ல் தான் ரூ.1 லட்சம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. அப்போது தான் அசல் ஆவணங்கள் என் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ரூ.1 லட்சத்திற்கு 3 சதவீத வட்டிவீதம் மாதந்தோறும் வட்டி பெற்றுவந்தேன் என்றால் சரியல்ல. ஜனவரி 2021 லிருந்து ஜூலை 2023 வரை மாதம் மாதம் வட்டியாக ரூ.3000 வீதம் பிரதிவாதி தவறாமல் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அதன்பின்னர் பேச்சுவார்த்தை நடத்தி ரூ.50,000த்தை பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.1,40,000த்தை என்னிடம் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு அவரை துன்புறுத்தி நானும், எனது மனைவியும் அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதி எங்கள் மீது உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் 05.08.2023ம் தேதி புகார் கொடுக்கப்பட்டு கு.எண்.150-2023ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பொய் வழக்கு ஆகும். மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் பிரதிவாதியை அதிக வட்டி வேண்டும் என்றும் அல்லது எரித்து கொலை செய்துவிடுவேன் என கிழே தள்ளி பையில் வைத்திருந்த ரூ.5,000த்தை வழிப்பறி செய்தும் பிரதிவாதியை கொல்லாமல் விடமாட்டோம் என நானும், எனது மனைவியும் மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய் வழக்கு ஆகும். மேற்படி வழக்கில் சி.சி.19-2024 என உசிலம்பட்டி, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பிராதில் முறையான தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. யார் யார் முன்பு பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என் மீது மேற்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா கடன் தொகையை பிரதிவாதிக்கு வங்கி மூலம் அனுப்பவில்லை. வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். நான் வருமான வரி சட்டப்படி ரூ.20,000க்கு மேல் கடனாக கொடுக்கும்போது வங்கி மூலம் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்பதால் எனது வழக்கு பொய்யானது, குற்ற நடவடிக்கைக்குரியது, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா கடன் தொகை ரூ.2,50,000 கடன் கொடுத்தபோது நகையை அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன். மேற்படி அடமான ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது நிரூபண வாக்கு மூலம் மற்றும் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும்போது Money lender சட்டப்படி முறையாக உரிமம் வாங்கியிருக்க வேண்டும் என்பதால் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. பிரதிவாதி எதிர்வழக்குரையில் புரோநோட்டில் தனது கையெழுத்து இல்லையென மறுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் மேற்படி கையெழுத்து

பிரதிவாதியுடையது தான். மேற்படி கையெழுத்தை நான் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதியின் கையெழுத்தை நிரூபிக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கலாம். வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றாலும், கைரேகையும் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை நான் சட்டத்திற்கு முரணாக வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குமூலம் இல்லையென்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.16 17:29:32 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.